*கவனிக்க.- 19.05.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2021 - 2017 මැයි මස 26 වැනි සිකුරාදා - 2017.05.26

*2021 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 830 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- (i) *அப்துல் மஜீத் எக்கடமி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, மே மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத் தொகுதி அதிகாரசபை (திருத்தம்)சட்டமூலம் 2017, மே மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *விஜய உதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, மே மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2017, யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூன் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

829 - B81174 - 5,403 (2017/05)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண சபையின் பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்பின் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017

( சிங்கள /தமிழ் /ஆங்கில மொழி மூலம் )

வடமேல் மாகாணத்தில் மாகாண சபைப் பாடசாலைகளில் காணப்படும் இலங்கை ஆசிரியர் சேவையின் வெற்றிடங்களுக்காக வடமேல் மாகாண அரச ஆசிரியர் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்புக்கு மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி தகைமை பெற்ற வடமேல் மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன், அந்த ஆட்சேர்ப்பின்போது உரிய மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும் என்பதால் குருநாகல் மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் குருநாகல் மாவட்டப் பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும், புத்தளம் மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் புத்தளம் மாவட்டப் பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தகுதியானவர்கள் போதுமானதாக இல்லாதபோது அடுத்த மாவட்டத்தில் அந்த பாடத்திற்கு தகுதியானோரில் இருந்து வெற்றிடங்களை பூரணப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

2. வெற்றிடங்களின் எண்ணிக்கை 1000 ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பாடங்களுக்கான வெற்றிடங்கள் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஒதுக்கப்படும் நிதி மற்றும் நடைமுறை சேவை தேவைப்பாடுகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை மாற்றமடையலாம்.

3. **சம்பள முறைமை :**
2016.02.25 ஆந் திகதிய 03/2016 இலக்கங் கொண்ட பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபத்தின் அட்டவணை I இன் GE 1-2016 சம்பளத் திட்டம் ரூபா 27,740 - 6 X 300 - 7 X 380 - 2 X 445 - ரூ.33,090 இந்தப் பதவிக்கு ஏற்புடையதாகும். எனினும் 2020 ஆம் ஆண்டு வரை சம்பளம் வழங்கப்படுவது மேற்படி சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய அந்த சுற்று நிருபத்தின் II ஆவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையிலாகும்.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

**4.1. கல்வித் தகைமைகள்**

(i) ஆசிரிய நியமனத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷேடமாக்கப்பட்ட பாடங்களுக்குரியதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட அட்டவணையில் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான பட்டம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். இந்த பட்டம் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்டாதாக இருக்க வேண்டும்.

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றும் இருக்க வேண்டும்.

**மிக முக்கியம்**

* தமது பட்டத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் அவதானம் செலுத்த வேண்டும்.
* பட்டத்திற்காக கற்ற பிரதான பாடம் /பாடங்கள் தொடர்பில் மட்டும் குறிப்பிட்ட ஆசிரியர் வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.
* விண்ணப்பிக்கக் கூடிய பாடங்களின் உச்ச எல்லை 03 ஆகும்.
* விண்ணப்பித்த பாடம் /பாடங்கள் எக்காரணம் கொண்டும் விண்ணப்பித்த பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

**4.2. உடல் மற்றும் உளத் தகைமைகள் :-**

சகல விண்ணப்பதாரிகளும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்றுவதற்கு தகுந்த உடல், உள ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.

4.3. **வயது** :- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்த வயதெல்லை 21 ஆகும். ஆகக் கூடிய வயதெல்லை 42 ஆகும்.

4.4. **ஏனைய தகைமைகள்**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
(ii) நற்பண்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
(iii) வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும்.
(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருடங்கள் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளராக இருக்க வேண்டும். (வாக்காளர் இடாப்பின் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது உறுதி செய்தல் வேண்டும். )

5. **சேவை நிபந்தனைகள்**

(i) அரச /மாகாண அரச சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாண அரச சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.

(ii) இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

(iii) இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 03 வருட தகுதி காண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.

(iv) வடமேல் மாகாண அரச சேவையின் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

(v) 2014.01.21 ஆந் திகதிய பொ.நி.சு 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 5 வருடங்களுக்குள் ஊடக மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி/மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

(vi) முதல் நியமனம் பெறும் மாவட்டத்தில் குறைந்த பட்சம் 10 வருடங்களும், பிரதேச செயலகப் பிரிவினுள் குறைந்த பட்சம் 6 வருடங்களும், சேவை தேவைப்பாடுடைய முதல் நியமனம் பெறும் பாடசாலையில் குறைந்த பட்சம் 5 வருடங்களும் சேவையிலீடுபட வேண்டும். அவ்வாறே குறித்த பாடசாலை கஷ்ட /அதிகஷ்டப் பாடசாலையாக இல்லாத போது தமது சேவைக் காலத்தினுள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் குறைந்த பட்சம் 5 வருடம் கஷ்ட /அதிகஷ்டப் பாடசாலையில் பணியாற்றவும் கட்டுப்பட்டவராகிறார்.

6.

6.1. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறைமை**

(i) குருநாகல் மாவட்டத்தில் வசிப்பவர்கள் அந்த மாவட்டத்தின் பாடசாலைகளில் காணப்படும் பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கும், புத்தளம் மாவட்டத்தில் வசிப்பவர்கள் அந்த மாவட்டத்தின் பாடசாலைகளில் உள்ள பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கும் மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

(ii) ஒவ்வொரு பாடத்திற்கும் /பாடங்களுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனாக இருந்தால் அல்லது குறைவாக இருந்தால் எழுத்துப் பரீட்சை ஒன்றோ அல்லது செயன்முறைப் பரீட்சை ஒன்றோ நடைபெற மாட்டாது என்பதுடன், தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

(iii) ஒவ்வொரு பாடத்திற்கும் /பாடங்களுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக இருந்தால் தெரிவு செய்வதற்காக எழுத்துப் பரீட்சை ஒன்று நடைபெறும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் பாட அடிப்படையில் தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கும், செயன்முறைப் பரீட்சை ஒன்றுக்கும் உட்படுத்தப்பட்டு திறமைகளின் வரிசை அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும்.

(iv) திறமைகளின் வரிசை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் போது வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் கீழுழைப்பு நிலையில் உள்ள பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதுடன், அந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட பின்னர் தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையின் பட்டத்தை அடிப்படைத் தகைமையாகக் கொண்ட பதவி ஒன்றில் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்.

6.2. ***எழுத்து மூலப் பரீட்சை*** - இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

| பாடம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது உளச் சார்பு ( 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவுப் பரீட்சை ( 01 மணித்தியாலம் ) | 100 | 40 |

**பரீட்சை விதிமுறைகள் :**

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும்.
(ii) சகல விண்ணப்பதாரிகளும் இரண்டு ( 02 ) வினாப் பத்திரங்களுக்கு முகங் கொடுக்க வேண்டும்.
(iii) சகல விண்ணப்பதாரிகளும் சகல வினாப் பத்திரங்களுக்கும் முகங் கொடுக்க வேண்டியது ஒரே மொழி மூலத்திலாகும். அந்த மொழி மூலம் அவர் நியமனம் பெற எதிர்பார்க்கும் மொழி மூலமாக இருக்க வேண்டும்.
(iv) விண்ணப்பதாரிக்கு தன்னுடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

**பாடத் திட்டம்**

**பாட இலக்கம் 01 - பொது உளச் சார்பு சோதனை**

விண்ணப்பதாரியின் திறன்கள், தர்க்கத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் இந்த வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு அல்லது குறு விடை வினாக்கள் 50 ஐ உள்ளடக்கி இருக்கும். இந்த சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ( ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

**பாட இலக்கம் 02 - பொது அறிவு**

சமூக, பொருளாதார, அரசியல் துறைகள் தொடர்பில் பொது அறிவைப் பரீட்சிக்கும் பல்தேர்வு வினாக்கள் 50 ஐக் கொண்டிருக்கும். ( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

6.3. ***நேர்முகப் பரீட்சை :-***

ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்கிறாரா என்பதைப் பரீட்சித்தல், உடல் தகைமை மற்றும் உளத் தகைமையைப் பரீட்சித்தல், பட்டம், வகுப்பு, சித்தி மற்றும் மேலதிக தகைமைகள் என்பவற்றுக்கு புள்ளிகளை வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

(அ) வகுப்புச் சித்திக்காக புள்ளிகளை வழங்கல் ( 15 புள்ளிகள் )

| வகுப்புச் சித்தி | புள்ளிகள் |
|---|---|
| I ஆம் வகுப்பு | 15 |
| II ஆம் வகுப்பு | 10 |
| III ஆம் வகுப்பு | 05 |

(ஆ) மேலதிக தகைமைகளுக்குப் புள்ளிகளை வழங்குதல் ( 15 புள்ளிகள் )

| தொடர்பு இல. | நியதிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. | தர்மப் பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது ஏனைய மதம் ஒன்றிற்கு அதற்குச் சமனான பரீட்சை ஒன்றில் சித்தி பெற்றமையை உறுதி செய்யும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் | 05 |
| 2 | அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் அல்லது விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழா ஒன்றில் அல்லது விளையாட்டு சங்கம் ஒன்றினால் நடாத்தப்படும் சம்பியன்ஷிப் போட்டித் தொடர் ஒன்றில் மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தை அல்லது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள்,பொது நலவாய விளையாட்டுப்போட்டிகள் அல்லது உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களைப் பெற்றிருத்தல். ( தகைமையைப் பூர்த்தி செய்யும்போது வயது 15 அல்லது அதை விட அதிகமாக இருக்க வேண்டும். ) | 05 |
| 3 | சங்கீதம் /நடனம் தொடர்பில் தேசிய பரீட்சை அல்லது பான்கண்டே சங்கீதப் பரீட்சையில் முதல் தர அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் ஒன்றை அல்லது சிலதைப் பெற்றிருத்தல் (அழகியல் பாடங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இந்த நியதிக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது) | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | 15 |

**6.4. செயன்முறைப் பரீட்சை :-**

செயன்முறைப் பரீட்சையில் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்ட தலைப்பின் கீழ் 5 நிமிடங்களுக்கு குறையாத நிகழ்த்துகை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இங்கு விண்ணப்பதாரியின் கருத்து வெளியீட்டு திறமை, தொடர்பாடல் திறமை தொடர்பில் விஷேடமாக அவதானம் செலுத்தப்படும். செயன்முறைப் பரீட்சைக்காக 10 புள்ளிகள் வழங்கப்படும்.

**7. பரீட்சை நிலையங்கள் :**

மேற்படி போட்டிப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நடைபெறும். விண்ணப்பதாரியான வசிக்கும் மாவட்டத்திற்கு ஏற்ப நகரத்தை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | 01 |
| புத்தளம் | புத்தளம் | 02 |

**8. தெரிவு செய்யும் முறை :**

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த பாடங்களுக்கு விண்ணப்பித்த, அந்த மாவட்டத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனாக இருந்தால் அல்லது அதை விடக் குறைந்த எண்ணிக்கையுடையதாக இருந்தால் அந்தப் பாடத்திற்காக எழுத்து மூலப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை நடைபெற மாட்டாது. அவ்வாறே நேர்முகப் பரீட்சையில் புள்ளி வழங்கல் மேற்கொள்ளப்படவும் மாட்டாது. அதன் படி விண்ணப்பதாரியின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் விண்ணப்பதாரி ஆசிரியராக கடமையாற்றுவதற்கு போதுமான உடல், உள ரீதியான தகைமையைக் கொண்டிருக்கின்றாரா என்பதைப் பரிசீலித்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்தில் ஒவ்வொரு பாடங்களுக்குமாக விண்ணப்பித்த அந்த மாவட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாயின்-

(i) ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் அந்தந்த பாடங்களுக்காக விண்ணப்பித்த குறித்த மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் விண்ணப்பதாரிகளில் எழுத்து மூலப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் சித்தியடைந்தவர்களில் அவர்கள் காட்டிய திறமை அடிப்படையில் வரிசைப்படுத்தி குறித்த மாவட்டத்தின் அந்தந்த பாடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு ( 03 ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) அந்த நேர்முகப் பரீட்சையில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள், நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் என்பவற்றின் கூட்டுத் தொகையின் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு ( 02 ) செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(iii) செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளிடையே எழுத்துப் பரீட்சைப் புள்ளி, நேர்முகப் பரீட்சைப் புள்ளி மற்றும் செயன்முறைப் பரீட்சைப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் குறித்த மாவட்டத்தின் ஒவ்வொரு பாடத்திற்கும் விண்ணப்பித்த, அந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவைக் கொண்ட தகைமை பெற்றவர்களின் தகைமை வரிசை தீர்மானிக்கப்படும். அந்த வரிசையில் அதிக திறமைகளைக் காட்டியவர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

(இ) எந்தவொரு பாடத்திற்கும் /பாடங்களிற்கும் ஒரு மாவட்டத்தில் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு முடிவடைந்த பின்னரும் வெற்றிடங்கள் காணப்படுமாயின் அந்தந்த பாடங்களுக்கு விண்ணப்பித்த மற்றைய மாவட்ட விண்ணப்பதாரிகளில் இருந்து முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

(ஈ) ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி இரண்டு ( 02 ) அல்லது மூன்று ( 03 ) பாடங்களுக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நியமனம் வழங்கும் பாடம் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு தீர்மானம் எடுக்கும்.

**9. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படுமாறு வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் காரியாலயத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் வ.மா.ச. நி/ 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதுடன், எக்காரணங் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**10. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

10.1. விண்ணப்பங்கள் A4 ( 21 X 29 செ.மீ. ) அளவுள்ள தாள்களைப் பயன்படுத்தி.-

(i) 1 தொடக்கம் 6 வரை முதலாவது பக்கத்திலும்

(ii) இலக்கம் 7 இலிருந்து மற்றைய பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள், அடிப்படைத் தகைமை பூர்த்தி செய்யப்படாத விணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்ததா என்பது தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்த வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம்.

(iv) விண்ணப்பித்த பாடம் / பாடங்கள் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது என்பதுடன், ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பமே அனுப்ப முடியும்.

(v) விண்ணப்பத்துடன் முழு விபரங்கள் அடங்கிய பட்டச் சான்றிதழின் பிரதி ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

(vi) **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் / சமாதான நீதவான் ஒருவர் /சத்தியப் பிரமாண ஆணையாளர் /சட்டத்தரணி ஒருவர் /முப்படையின் அதிகாரி ஒருவர் /பொலிஸ் சேவையின் அதிகாரி ஒருவர் அல்லது 240,360 ரூபாவுக்கு அதிகமான தொகையை வருடாந்த அடிப்படைச் சம்பளமாகப் பெறும், நிரந்தரமான அரச /மாகாண அரச பதவி ஒன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(vii) ஏற்கனவே, அரச சேவையில் உள்ள ஒருவராயின் தமது விண்ணப்பத்தை உரிய நிறுவனத் தலைவரின் ஊடாக முன்வைக்க வேண்டும்.

10.2. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2017.06.23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். இத்திகதியின் பின்னர் எந்த ஒரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
௨ வாயில்
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வடமேல் மாகாண ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017' எனக் குறிப்பிடுவதுடன் வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

10.3. முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்த, 2017.06.23 ஆம் திகிதியன்று அல்லது அதற்கு முன்னர் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்படும். ஆனாலும் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படலானது மேற்கூறிய தகைமைகளை பூர்த்தி செய்தமையை ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளின் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என நிரூபனமானால் அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**11. ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களில் ஒன்றின் மூலம் உறுதி செய்ய வேண்டும்:-

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
2. செல்லுபடியான கடவுச் சீட்டு.

**12. பொய்த் தகவல்களை வழங்குவோருக்கான தண்டணை:**

விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத் தகைமை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது எனத் தெரியவரின்அவர் வடமேல் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதிச் சீட்டு கிடைத்தலானது அவர் குறித்த பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையை ஏற்றுக் கொண்டமையாகக் கருதப்பட மாட்டாது.

13. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்தாமல் நியமனம் வழங்குதல் அல்லது வழங்காமல் விடுதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயங்கள் தொடர்பில் விளக்குதல் /தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

வடமேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழுவின் கட்டளைப்படி.

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2017, மே 17.

மாதிரி விண்ணப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக [ ]

**வடமேல் மாகாண சபையின் பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்பின் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017**
**( சிங்கள / தமிழ் / ஆங்கில மொழி மூலம் )**

1. நிலையான வதிவு மாவட்டம்:- [ ] நகர இலக்கம் :- [ ]

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :- :-

சிங்களம் - S தமிழ் - T ஆங்கிலம் - E (நியமனம் பெற எதிர்பார்க்கும் மொழி மூலம்)
( உரிய எழுத்தை கட்டத்தினுள் எழுதவும் )

3.

| விண்ணப்பிக்கும் பாடம் / பாடங்கள் | விடய இலக்கம் |
|---|---|
| | |
| | |

( விண்ணப்பிக்கக் கூடிய பாடங்களின் உச்ச எண்ணிக்கை 3 ஆகும் )

4. 4.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம் / தமிழில் ) :- ..............................................................................................................
4.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :- ..............................................................................................................
4.3. முழுப் பெயர் ( சிங்களம் / தமிழில் ) :- ..............................................................................................................
4.4. முழுப் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :- ..............................................................................................................

5. 5.1. வதியும் பிரதேச செயலாளர் பிரிவு :- ...................... கிராம அலுவலர் பிரிவு :- ..........................................
5.2. தொலைபேசி இலக்கம் :- ................................
5.3. தற்போதைய முகவரி ( சிங்களம் / தமிழில் ) :- ..............................................................................................................
( பரீட்சை அனுமதிச் சீட்டு இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும் )
5.4. தற்போதைய முகவரி ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :- ..............................................................................................................

6. 6.1. தேசிய அடையாள அட்டை எண் :- [ | | | | | | | | | ]
( உரிய கட்டத்தினுள் எழுதவும் )
6.2. பிறந்த திகதி :- ஆண்டு [ ] மாதம் [ ] திகதி [ ]
6.3. 2017.06.23 ஆம் திகதிக்கு வயது :- வருடங்கள் [ ] மாதங்கள் [ ] நாட்கள் [ ]
6.4. பால் :- ஆண் - M
பெண் - F [ ]
( உரிய எழுத்தினை கட்டத்தினுள் எழுதுக )
6.5. சிவில் அந்தஸ்த்து :- திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2 [ ]

7. பெற்றுக் கொண்டுள்ள பட்டம் தொடர்பான விபரம் :-

7.1 பட்டம் :- ......................................................................

7.2 பட்டம் பெற்றுக் கொண்ட பல்கலைக் கழகம் :- ................................................

7.3 பட்டத்திற்காக பயின்ற பிரதான பாடம் /பாடங்கள் :-

| |
|---|
| |
| |
| |
| |

7.4 பெற்றுக் கொண்ட வகுப்பு :- .............................................

7.5 பட்டம் செல்லுபடியாகும் திகதி :- ......................................

7.6 பட்டம் பயின்ற மொழி மூலம் :- .....................................

( விவரமான பட்டச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும் )

7.7 க.பொ.த ( சா. த )

| சித்தி எய்திய ஆண்டு | பரீட்சை சுட்டெண் |
|---|---|
| முதலாம் அமர்வு | |
| இரண்டாம் அமர்வு | |

| பாடம் | முதலாம் அமர்வு | இரண்டாம் அமர்வு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

7.8 க.பொ.த ( உ. த )

சித்தியடைந்த ஆண்டு :- ..................

பரீட்சை எண் :- ...........................

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

8. பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் விபரம் :

8.4 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் :- ...........................

8.5 பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதியும் :- ..................................

8.6 செலுத்திய கட்டணம் :- ..................................

| |
|---|
| பற்றுச் சீட்டின் நிழற்படம் பிரதி ஒன்றை தங்கள் வசம் வைத்துக் கொள்ளவும். |
| பற்றுச் சீட்டு கழராதவாறு இங்கு ஒட்டவும். |

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலும் நம்பிக்கையின் படியும் உண்மையானதும் சரியானதும் என தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியில் பூரணப்படுத்தப்படாமல் /பிழையாக நிரப்பப்படுவதால் ஏற்படும் இழப்பை ஏற்றுக் கொள்கிறேன். மேலும் இதன் சகல பகுதிகளையும் சரியாக பூரணப்படுத்தியுள்ளேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் இவ்வுறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் நியமனத்திற்கு முன்னரே தகுதியற்றவர் என்பதை நான் அறிவேன். நான் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தெரிய வந்தால் நான் பணி நீக்கம் செய்யப்படலுக்கு உட்படுத்தப்படுவேன் என்பதை அறிவேன்.

(இ) பரீட்சைக் கட்டணத்துக்குரிய பணம் பிரதேச செயலகத்தில் செலுத்தப்பட்டு பெறப்பட்ட அதன் பற்றுச் சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் / வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு விதிக்கும் சட்ட திட்டங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

(ஈ) இதில் வழங்கப்பட்டுள்ள எந்த தகவலையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

திகதி :- .............................. .......................................

விண்ணபதாரியின் கையொப்பம்.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................... என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் எனது முன்னிலையில் .............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், பற்றுச் சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

| | |
|---|---|
| உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் | :- ......................................................................... |
| பதவி | :- ....................................... |
| முகவரி | :- ......................................................................... |
| | ( உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்கவும் ) |
| திகதி | :- .............................. |

11. விண்ணப்பதாரி அரச /மாகாண அரச உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

திரு. /திருமதி /செல்வி .......................................... என்பவரின் விண்ணப்பத்தை முன்வைக்கிறேன். அவர் இந்த அமைச்சில் /திணைக்களத்தில் நிரந்தர /தற்காலிக /அமைய ஊழியராக பணியாற்றுகிறார் என்பதையும், அவர் குறித்த பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

..................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

| | |
|---|---|
| அதிகாரமளித்த உத்தியோகத்தர் | :- .................................................. |
| அமைச்சு /திணைக்களம் | :- .................................................. |
| | ( உத்தியோகபூர்வ முத்திரையை பதித்து உறுதிப்படுத்தவும் ) |
| திகதி | :- .............................. |

## அட்டவணை 01

| பாட இலக்கம் | பாடம் | தகைமை | வெற்றிடம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | |
| | | **கனிஷ்ட பிரிவு** | | | | | | | |
| 1. | ஆரம்பப் பிரிவு | முழுக் கற்கைக் காலத்திலும் சிங்களம்/தமிழ் பாடத்தை பிரதான பாடமாகக் கற்று பெற்றுக் கொண்ட இளமானிப் பொது அல்லது விசேட பட்டம் அல்லது வெகுசனத் தொடர்பாடல் /உளவியல்/ சமூக விஞ்ஞானம்/மொழியியல் ஆகிய பாடங்கள் உள்ளடங்கிய இளமானி பொது அல்லது விசேட பட்டம் மற்றும் க.பொ.த. ( உயர் தர ) பரீட்சையில் சிங்களம் /தமிழ் பாடத்திற்காக திறமைச் சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்தி. | 125 | 32 | - | 175 | 38 | - | 370 |
| | | **க.பொ.த. (சா.தரம்) இரண்டாம் நிலைப் பிரிவு ( 6 - 11)** | | | | | | | |
| 2. | கணிதம் | கணிதத்தை பாடமாகாக் கொண்ட விஞ்ஞானமானி/பிரயோக விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டம் மற்றும் உயர் தரத்தில் இணைந்த கணிதப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். | 54 | 14 | 6 | 55 | 7 | 4 | 140 |
| 3. | விஞ்ஞானம் | உயிரியல் /இரசாயனவியல்/தாவரவியல் /விலங்கியல் /பௌதீக வியல் ஆகிய பாடங்களில் ஒன்றைக் கொண்ட விஞ்ஞானமானி / பிரயோக விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டம். | 30 | 7 | 3 | 35 | 6 | 2 | 83 |
| 4. | சிங்களம் /தமிழ் (முதலாம் மொழி) | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் சிங்களம் அல்லது சிங்கள மொழியியலை அல்லது தமிழ் அல்லது தமிழ் மொழியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 7 | 3 | - | 20 | 4 | - | 34 |
| 5. | வரலாறு | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் வரலாறு /தொல்லியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 9 | 4 | - | 15 | 6 | - | 34 |
| 6. | புவியியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் புவியியலை பிரதான பாட மாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 10 | 1 | 1 | 7 | 4 | 1 | 24 |
| 7. | வணிகக் கல்வியும் கணக்கீடும் | வணிகக் கல்வி /கணக்கியல் /வணிகம் ஆகிய பாடங்களில் ஒன்றைக் கொண்ட வணிகமானி /இளமானி /வணிக நிர்வாக மானி /விஞ்ஞானமானி /வணிக முகாமைத்துவமானி பொது அல்லது விசேட பட்டம். | 4 | - | - | 3 | - | - | 7 |
| 8. | சித்திரம் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் சித்திரத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட பொது அல்லது விசேட பட்டம். | 20 | 10 | - | 10 | 7 | - | 47 |

**அட்டவணை 01** *(தொடர்ச்சி)*

| பாட இலக்கம் | பாடம் | தகைமை | வெற்றிடம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | |
| 9. | நடனம் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் நடனத்தை பிரதான பாட மாகக் கொண்டு பெற்றுக் கொண்ட ஆற்றுகைக் கலை /நுண்கலை இளமானி பொது அல்லது விசேட பட்டம் அல்லது நடனக் கலைக்கான விசேட பட்டம். | 5 | - | - | 4 | - | - | 9 |
| 10. | கீழைத்தேய இசை | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் கீழைத்தேச இசையைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட ஆற்றுகைக் கலை /நுண்கலை இளமானி பொது அல்லது விசேட பட்டம் அல்லது கீழைத்தேய இசை தொடர்பான விசேட பட்டம். | 3 | - | - | 4 | 2 | - | 9 |
| 11. | மேலைத் தேய இசை | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் மேலைத்தேய இசையைப் பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட ஆற்றுகைக் கலை /நுண்கலை இளமானி பொது அல்லது விசேட பட்டம் அல்லது மேலைத்தேய இசை தொடர்பான விசேட பட்டம். | 2 | - | - | 3 | - | - | 5 |
| 12. | வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் | சமூகவியல் /அரசியல் /புவியியல் /வெகுசனத் தொடர்பாடல் / வரலாறு /பொருளியல் ஆகிய பாடங்கள் அல்லது இவற்றில் கலவையிலான ஏதேனுமொரு இளமானிப் பட்டம். | 5 | 2 | - | 6 | 5 | - | 18 |
| 13. | விவசாயமும் உணவுத் தொழில் நுட்பவியலும் | விவசாயத் தொழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவம் / விவாசயம் /உணவுத் தொழில் நுட்பவியல் மற்றும் முகாமைத் துவம் ஆகிய பாடங்களைக் கொண்ட விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டம். | 12 | - | - | 8 | - | - | 20 |
| 14. | தகவல் தொழில் நுட்பம் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் /கணினி விஞ்ஞானம் ஆகியவற்றை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞானமானி / தகவல் தொழில்நுட்ப பொது அல்லது விசேட பட்டம். | 12 | 4 | - | 8 | - | - | 24 |
| 15. | சுகாதாரமும் உடற் கல்வியும் | விளையாட்டு முகாமைத்துவ பட்டம் | 10 | 2 | 1 | 7 | 1 | 2 | 23 |
| 16. | ஆங்கிலம் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் ஆங்கில மொழியை அல்லது ஆங்கில மொழியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 10 | 3 | - | 12 | 6 | - | 31 |
| | | **க.பொ.த. (உயர் தரம்) ( 12 - 13 )** | | | | | | | |
| 17. | சிங்களம்/ தமிழ் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் சிங்களம் அல்லது சிங்கள மொழியியல் அல்லது தமிழ் அல்லது தமிழ் மொழியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 2 | 4 | - | 3 | - | - | 9 |

**அட்டவணை 01** *(தொடர்ச்சி)*

| பாட இலக்கம் | பாடம் | தகைமை | வெற்றிடம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | |
| 18. | அரசியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் அரசியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட பொது இளமானி பட்டம் அல்லது அரசியல் விசேட பட்டம். | 1 | - | - | 2 | - | - | 3 |
| 19. | வரலாறு | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் வரலாறு /தொல்லியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட பொது இளமானி அல்லது வரலாறு /தொல்லியல் விசேட பட்டம். | 1 | - | - | - | - | - | 1 |
| 20. | நாடகமும் அரங்கியலும் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் நாடகமும் அரங்கியலும் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட பொது ஆற்றுகைக் கலை /நுண்கலை இளமானி பட்டம் அல்லது அரசியல் விசேட பட்டம். | 1 | - | - | 1 | - | - | 2 |
| 21. | புவியியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் புவியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 2 | - | - | 3 | - | - | 5 |
| 22. | தர்க்கவியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் தர்க்கவியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 2 | - | - | 2 | - | - | 4 |
| 23. | வெகுசன தொடர் பாடலும் ஊடகக் கல்வியும் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் வெகுசனத் தொடர்பாடல் / ஊடகக் கற்கையை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது அல்லது விசேட பட்டம். | 1 | - | - | 1 | - | - | 2 |
| 24. | பொருளியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் பொருளியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி /வர்த்தகமானி / வணிக முகாமைத்துவ /விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது பொருளியல் விசேட பட்டம். | 1 | - | - | 2 | - | - | 3 |
| 25. | வணிகக் கல்வி | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் வணிகக் கல்வியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட வணிகமானி /வணிக நிர்வாக/வணிக முகாமைத்துவ /விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது கணக்கியல் விசேட பட்டம். | 2 | 1 | - | 2 | 1 | 1 | 7 |
| 26. | கணக்கியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் கணக்கீட்டுக் கல்வியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட வணிகமானி / வணிக நிர்வாக /வணிக முகாமைத்துவ /விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது கணக்கியல் விசேட பட்டம். | 1 | - | 1 | 1 | - | 1 | 4 |

**அட்டவணை 01** *(தொடர்ச்சி)*

| பாட இலக்கம் | பாடம் | தகைமை | வெற்றிடம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | |
| 27. | விவசாயம் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் விவசாயத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம் அல்லது விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவ பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 3 | - | - | 2 | - | - | 5 |
| 28. | இணைந்த கணிதம் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் கணிதப் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம் மற்றும் உயர் தரத்தில் இணைந்த கணிதப் பாடத்தில் சித்தி. | 3 | - | - | 3 | - | 1 | 7 |
| 29. | பௌதீகவியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் பௌதீகவியல் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞான மானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம் அல்லது பிரயோக விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம் மற்றும் உயர்தரத்தில் பௌதீகவியல் பாடத்தில் சித்தி. | 3 | - | - | 3 | - | 1 | 7 |
| 30. | உயிரியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் உயிரியல் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞானமானி பட்டம் விலங்கியல் /தாவரவியல் /ஆகிய பாடங்களின் கலப்பிலான விஞ்ஞானமானி /பிரயோக விஞ்ஞானமானி /உயிரியல் விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டத்துடன் உயர் தரத்தில் உயிரியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல். | 2 | - | - | 2 | - | 1 | 5 |
| 31. | இரசாயனவியல் | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் இரசாயனவியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது இரசாயனவியல் விசேட பட்டம் அல்லது இரசாயன வியலை பிரதான பாடமாகக் கொண்ட பிரயோக விஞ்ஞானமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 3 | - | - | 2 | - | 1 | 6 |
| 32. | உயிரியல் தொழில் நுட்பவியல் | விவசாயம் /உயிரியல் பாடங்களைக் கொண்ட விஞ்ஞானமானி பொது அல்லது விசேட பட்டம். | 4 | - | - | 4 | - | - | 8 |
| 33. | பொறியியல் தொழில்நுட்பம் | பொறியியல் பொது பட்டம் அல்லது விசேட பட்டம் /பொறியியல் தொழில்நுட்ப பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | - | - | - | 4 | - | - | 4 |

**அட்டவணை 01** *(தொடர்ச்சி)*

| பாட இலக்கம் | பாடம் | தகைமை | வெற்றிடம் | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குருநாகல் | | | புத்தளம் | | | |
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | |
| 34. | கொரிய மொழி | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் கொரிய மொழியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 4 | - | - | 2 | - | - | 6 |
| 35. | ஜப்பானிய மொழி | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் ஜப்பானிய மொழியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 3 | - | - | 1 | - | - | 4 |
| 36. | பிரான்ஸிய மொழி | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் பிரான்ஸிய மொழியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 11 | - | - | 1 | - | - | 12 |
| 37. | ஜேர்மன் மொழி | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் ஜேர்மன் மொழியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 2 | - | - | 1 | - | - | 3 |
| 38. | சீன மொழி | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் சீன மொழியை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 5 | - | - | 1 | - | - | 6 |
| 39. | ஆங்கில மொழி | மொத்த கற்றல் காலத்தினுள்ளும் ஆங்கில மொழியை /ஆங்கில மொழியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட இளமானி பொது பட்டம் அல்லது விசேட பட்டம். | 6 | - | - | 2 | - | - | 8 |
| 40. | தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில் நுட்பம் | தகவல் தொடர்பாடல் பொது அல்லது விசேட பட்டம் ( ஆங்கில மொழி மூலம்). | - | - | - | - | - | 1 | 1 |
| | | மொத்தம் | 381 | 87 | 12 | 417 | 87 | 16 | 1000 |

6 - 760

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.